<u>குளச்சல் நகராட்சி</u>

குளச்சல் நகராட்சி மன்றத்தின் அவசரக்கூட்டம் ஜுன் திங்கள் 15–ம் நாள் வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்கு நடைபெறும். தாங்கள் தவறாது கலந்து கொள்ளுமாய் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

தலைவர்
குளச்சல் நகராட்சி மன்றம்

**<u>பொருள் எண்: 1</u>**

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட ஆசாத் நகரில் தன்னார்வ தொண்டு நிறுவனங்களால் கட்டப்பட்டுள்ள சுனாமி மறுவாழ்வு நிரந்தர குடியிருப்புகள் அமைந்துள்ள பகுதிகளில் சிமெண்ட் கான்கிரீட் சாலை ETRP திட்டத்தின்கீழ்) அமைத்திட அரசாணை எண்.835/ 20.12.2006 – Revenue (NC IV-I) Department - ரூ. 60.00 லட்சத்திற்கு நிர்வாக அனுமதி பெறப்பட்ட விபரம் இந்நகர் மன்றத்தின் 27.12.2006–ம் நாளைய 71–ம் எண் தீர்மானத்தின்படி பதிவு செய்யப்பட்டுள்ளது. அதன்பேரில் ரூ. 64.00 இலட்சத்திற்கு சுனாமி நிதியில் பணி செய்ய தொழில் நுட்ப அங்கீகாரம் பெறப்பட்டு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதின் அடிப்படையில் திரு.M.M.கிளீட்டஸ் என்பவரின், மதிப்பீட்டை விட 9.14% கூடுதல் விகித ஒப்பந்தப்புள்ளியை ஏற்றுக் கொண்டதில் ரூ. 65,07,550/– (ரூபாய் அறுபத்தி ஐந்து இலட்சத்து ஏழாயிரத்து ஐநூற்றி ஐம்பது மட்டும்) மதிப்பீட்டில் செய்ய மறு சீரமைப்பு துறை, சென்னை, திட்ட இயக்குநர் கடிதம் எண். TRR-EAP-1/21996/06 நாள் 11.06.2007 –ல் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது என்ற விபரம் மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும்.

**அ.குறிப்பு** : பதிவு செய்யலாம்.

**தீர்மானம் எண். 222 பதிவு செய்யப்பட்டது.**

**<u>பொருள் எண் : 2</u>**

குளச்சல் நகராட்சியில் ரூ. 310.00 இலட்சம் மதிப்பீட்டில் ஆசிய வளர்ச்சி வங்கி மூலம் செயல்படுத்தப்படும் சுனாமி நிவாரணப் பணிகளில் ஒன்றான களிமார் பாலம் முதல் வாய்க்கால் தெரு வரை பாம்பூரி வாய்க்காலின் மேற்புறமும், அதன்பின் சைமன்காலனி பாலம் வரை கிழபுறமும், தடுப்புச்சுவர் எழுப்பி சாலை அமைத்தல் மற்றும் வாய்க்கால் தெருவில் பாம்பூரி வாய்க்காலின் குறுக்கே பாலம் கட்டும் பணி, வாய்க்காலின் இரு கரைகளிலும் செய்ய வேண்டி உள்ளது. மேற்படி சாலை அமைப்பதால் குளச்சல் கடற்கரை பகுதியில் இயற்கை இடர்பாடுகள் நேரும் காலங்களில் கடற்கரை வாழ் பகுதி மக்கள் நகரப்பகுதிக்குள் வருவதற்கு நல்ல ஒரு இணைப்பு சாலையாக அமையும். மேலும் குளச்சல் மீன்பிடி துறைமுகத் திட்டம் வெகு விரைவில் அமுல்படுத்தப்பட இருக்கின்ற காரணத்தால் துறைமுகம் அமைக்கப்பட்ட பிறகு துறைமுகப் பகுதியிலிருந்து வெளியேறும் கனரக வாகனங்கள் நேரடியாகவே நகரப் பகுதிக்குள் செல்வதற்கு ஒரு மாற்றுச் சாலையாகவும் இச்சாலை மிகவும் பயன்படும். எனவே பணியின் முக்கியத்துவம் கருதி மேற்படி பணியினை பொதுப்பணித் துறை மூலம் மேற்கொள்வதற்கு மாவட்ட நிர்வாகம் மூலம் பொதுப்பணித் துறையினரின் இசைவினை (Concurrence) பெற நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் கடித எண். ந.க.எண்.16685/07/TSU நாள் 09.05.2007–ல் அறிவுறுத்தப்பட்டுள்ளது. விபரம் மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

<u>**அ.குறிப்பு**</u> : இப்பணி மிக முக்கியப் பணியாக உள்ளதாலும் பணியினை பார்வையிடவும், மேற்பார்வையிடவும் போதுமான தொழில் நுட்ப அலுவலர்கள் நகராட்சியில் இல்லாததாலும் இப்பணியினை பொதுப்பணித் துறையினரிடம் ஒப்படைத்து செய்ய அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண். 223 அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

<u>பொருள் எண்: 3</u>

குளச்சல் நகராட்சியில் ஆசிய வளர்ச்சி வங்கி மூலம் ரூ.105 இலட்சம் மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும் சுனாமி நிவாரணைப்பணிகளில் ஒன்றான கொட்டில்பாடு பகுதியிலிருந்து மரமடி சந்திப்பு வரையிலும் மற்றும் சைமன்காலனி பாலத்திலிருந்து கடல் வரையிலும் பொதுப்பணித்துறைக்கு சொந்தமான ஏ.வி.எம். வாய்க்கால் பகுதியினை ஒட்டி, மழைநீர் வடிகால் அமைக்கும் பணி செய்ய வேண்டியுள்ளது. ஏற்கனவே இவ்வாய்க்காலின் ஒரு ஓரத்தில் மரமடி ஏசுதாஸ் காலனி சந்திப்பிலிருந்து சைமன்காலனி பாலம் வரை வடிகால் அமைக்கப்பட்டு இது பாம்பூரி வாய்க்காலில் கலந்து வருகிறது. எனவே இதற்கு முன்பகுதியில் கொட்டில்பாட்டிலிருந்து மரமடி சந்திப்பு வரையிலும், பின் பகுதியில் சைமன்காலனி பாலத்திலிருந்து கடல் வரையிலும் மழைநீர் வடிகால் அமைக்க வேண்டியுள்ளது. எனவே இப்பகுதிகளில் பொதுப்பணித் துறை மூலம் மழைநீர் வடிகால் அமைக்க மாவட்ட நிர்வாகம் மூலம் பொதுப்பணித்துறையினரின் இசைவினை (Concurrence) பெற நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் கடித எண். ந.க.எண்.16685/07/TSU நாள் 09.05.2007–ல் அறிவுறுத்தப்பட்டுள்ளது. இது மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும்.

**அ.குறிப்பு :** மன்றம் முடிவு செய்யலாம்.

**தீர்மானம் எண். 224 AVM கால்வாயின் ஓரங்கள் 1982–ாம் ஆண்டு முதலே குளச்சல் நகராட்சி வசம் இருந்தும் பராமரிக்கப்பட்டும் வருகிறது. இக்கரையின் ஓரங்களில் நகராட்சி மூலம் பல படித்துறைகள் கட்டப்பட்டுள்ளன. தேசிய குடிசைப்பகுதி திட்டம் மற்றும் வாம்பே திட்டங்கள் மூலமாக 20 எண்ணிக்கைகள் கழிப்பிடங்கள் நகராட்சி மூலம் கட்டப்பட்டு, 24 மணி நேர தண்ணீர் வசதியுடன் நகராட்சியால் நல்லமுறையில் பராமரிக்கப்பட்டு வருகிறது. MP LAD மற்றும் MLA LAD ஆகிய திட்டங்களின் மூலம் 10–க்கும் அதிகமான பாலங்களும், கால்வாயின் குறுக்கே கட்டப்பட்டுள்ளன. தேசிய குடிசைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் இயேசுதாஸ் காலனி முதல் சைமன்காலனி பாலம் வரைக்கும் சுமார் 500 மீ. தூரத்திற்கு இக்கால்வாயின் ஓரமாக ஏற்கனவே வடிகால் கட்டப்பட்டுள்ளது. இவ்வாறு கட்டப்பட்டுள்ள வடிகால் ஒரு பகுதி வரை நிறுத்தப்பட்டு விட்டதால் அதன்பின் இவ்வடிகாலில் ஓடும் கழிவு நீர் வாய்க்காலில் கலக்கிறது. இப்பொருளில் குறிப்பிடப்பட்டுள்ள வடிகாலினை ஏற்கனவே உள்ள வடிகாலின் தொடர்ச்சியாகவே வாய்க்காலின் ஓரத்தில் கட்டி கடலில் சென்று கலக்க வைக்க வேண்டியுள்ளது. எனவே காலதாமதங்களை தவிர்க்கும் பொருட்டும், பணியின் அவசியத்தைக் கருதியும், பணியினை விரைந்து முடிக்க வேண்டியும், AVM கால்வாயின் கரை ஓரங்களில் ஏற்கனவே நகராட்சி மூலம் செய்துள்ள பணிகளைப் போலவே இப்பணியினையும் நகராட்சியே எடுத்துச் செய்ய மன்றத்தில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்: 4</u>**

குளச்சல் நகரின் அனைத்துப் பகுதிகளுக்கும் தற்போது 11 போர்வெல் பம்புகள் மூலம் 9 மேல்நிலை நீர்தேக்க தொட்டிகளில் குடிநீர் ஏற்றப்பட்டு தினமும் 20 இலட்சம் லிட்டர் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இதனால் அனைத்து போர்வெல்களிலும் மின் மோட்டார்கள் தினமும் 22 மணி நேரம் இயங்கி வருகின்றது. இதன் காரணமாக மின் மோட்டார்கள் மற்றும் ஸ்டார்ட்டர்கள் அடிக்கடி பழுதடைந்து உபயோகமில்லாமல் ஆகிவிடுகின்றன. எனவே தரமான கம்பெனி மின்மோட்டார்களை வாங்கும் பட்சத்தில் நீடித்து உழைக்கும் என்பதால் தரமான கம்பெனி மின்மோட்டார்களை வாங்குவதற்கும், தற்போது வெள்ளிப்பிள்ளையார் கோயில் தெருவில் உள்ள ஆழ்துளை கிணறு எண்.3, பாலத்தன்கரை நீர்தேக்க தொட்டியில் உள்ள மோட்டார் எண். 8 மற்றும் பர்னட்டிவிளை டேங்க் அருகில் உள்ள போர்வெல் எண்.9 ஆகியவற்றின் மோட்டார்கள் சரிவர இயங்காமல் உள்ளது. ஆகவே அவற்றில் புதிய மோட்டார்கள் பொருத்தவும், கூடுதலாக இரண்டு Spare motor ஆக 5 மோட்டார்கள் மற்றும் அது தொடர்பான ஸ்டார்ட்டர்கள், சப்மெர்சிபுள் கேபிள்கள் வாங்குவதற்கு நகராட்சி மன்றத் தலைவர் அவர்கள் அறிவுறுத்தலின் பேரில் இது தொடர்பாக தயாரிக்கப்பட்ட ரூ. 2,40,000/–க்கான மதிப்பீட்டிற்கும் இப்பணியினை நகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்திடவும் மன்ற ஒப்புதல் கோரப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**தீர்மானம் எண். 225 அலுவலகக் குறிப்பினை ஏற்றுக்கொள்ள ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்: 5</u>**

சுனாமி திட்டத்தின்கீழ் வெள்ளிப்பிள்ளையார் கோயில் முதல் ஆசாத் நகர் வரையில் போடப்படவுள்ள தார் சாலையினை நகராட்சி மன்றத் தலைவர், உதவி செயற் பொறியாளர் மற்றும் நகராட்சி பொறியாளருடன் ஆய்வு மேற்கொண்டதில் வெள்ளிப்பிள்ளையார் கோயில் செல்லும் தெருவில் உபயோகமில்லாமல் ஓர் அடிபம்பு இருப்பதினை கழற்றி அப்புறப்படுத்தும்படி அறிவுறுத்தப்பட்டது. மேற்படி அடிபம்பு பல ஆண்டுகளாக உபயோகத்தில் இல்லாமல் உள்ளதோடு மழைநீர் வடிகால் ஓடை மற்றும் சாலையின் குறுக்கே இருப்பதால் மேற்கண்ட அடிபம்பினை மேற்படி பகுதியிலிருந்து அப்புறப்படுத்துவதற்கு மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு :** அவசர அவசியத்தின்பேரில் நகராட்சி மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண். 226 அலுவலகக் குறிப்பினை ஏற்றுக்கொள்ள ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்: 6</u>**

இந்நகராட்சி சுனாமி திட்டத்தின்கீழ் (TEAP) மாதாகாலனிப் பகுதியில் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி கட்டப்படவுள்ள இடத்தில் மண் பரிசோதனை செய்து அதற்கான அறிக்கையினை நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு அனுப்ப வேண்டியுள்ளதால் அதற்கான ஆய்வுக்கட்டண தொகை ரூ. 4,500/– னை முதல்வர், அரசு பொறியியல் கல்லூரி, திருநெல்வேலி அவர்களுக்கு செலுத்தவும், சுனாமி நிதியில் செலவு செய்திடவும் மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு :** அவசர அவசியத்தின் பேரில் நகராட்சி மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று, முதல்வர், அரசு பொறியியல் கல்லூரி, திருநெல்வேலி அவர்களுக்கு ரூ. 4,500/– சுனாமி நிதியிலிருந்து செலுத்தியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண். 227 அலுவலகக் குறிப்பினை ஏற்றுக்கொள்ள ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்: 7</u>**

சுனாமி மறுவாழ்வு திட்டத்தின்கீழ் (TEAP) வெள்ளிப்பிள்ளையார் கோயில் முதல் ஆசாத் நகர் வரை அமைக்கப்பட இருக்கின்ற சாலையின் குறுக்கே குளச்சல் கடற்கரை பகுதியில் அமைந்துள்ள மேல்நிலை நீர்தேக்கத் தொட்டிகளுக்கு நீர் ஏற்றும் பம்பு அறை (எண்.1) அமைந்துள்ளது. சூமற்படி பம்பு அறையை இடித்து விட்டு அதன் ஆழ்துளை கிணற்றினை 135 மீட்டர் கேபிள் மூலம் பம்பு அறை எண்.2–ல் (வெள்ளிப்பிள்ளையார் கோயில் சந்திப்பில் உள்ள) இணைத்து புதிதாக மெயின் சுவிட்ச் அமைக்கவும், போர்வெல் இருக்கும் இடத்தில் 2” G.I. பைப்பினை மாற்றி அமைத்து புதிய சேம்பர் ஒன்று கட்டுவதற்கும் ரூ. 40,000/– மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்ட, இப்பணியினை பொது நிதியிலிருந்து செய்வதற்கும் மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** :அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண். 228 அலுவலகக் குறிப்பினை ஏற்றுக்கொள்ள ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண் : 8</u>**

குளச்சல் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2006–2007–ன்கீழ் இந்நகராட்சிப் பகுதிகளுக்கு 25 சோடியம் ஆவி விளக்குகள் அமைப்பதற்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் ரூ.1.43 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு அதன்பேரில் மேற்படி விளக்குகளை மின்கம்பங்களில் அமைப்பதற்கு மதிப்பீடு கட்டணமாக ரூ. 19730/– தமிழ்நாடு மின்வாரியத்திற்கு மேற்கண்ட திட்ட நிதியிலிருந்து செலவு செய்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு :** அவசர அவசியத்தின்பேரில் நகராட்சி மன்றத் தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று ரூ. 19730/– தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு செலுத்தியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண். 229 அலுவலகக் குறிப்பினை ஏற்றுக்கொள்ள ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்: 9</u>**

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட ஆசாத் நகர் பகுதியில் சுனாமி நிவாரணத் திட்டத்தின்கீழ் சாலைப்பணி மேற்கொள்ளப்படவுள்ளதால் இடையூறாக நிற்கும் 24 மின்கம்பங்களை மாற்றியமைக்க நகர்மன்றத் தீர்மானம் எண். 203 நாள் 29.05.2007–ல் அனுமதி அளித்துள்ளதின் பேரில் விண்ணப்ப பதிவு கட்டணமாக ரூ.500/– மின்வாரியத்திற்கு சுனாமி நிதியிலிருந்து செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

**அ.குறிப்பு:** அவசர அவசியத்தின்பேரில் நகராட்சி மன்றத் தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று ரூ. 500/– சுனாமி நிதியில் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு செலுத்தியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண். 230 அலுவலகக் குறிப்பினை ஏற்றுக்கொள்ள ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்: 10</u>**

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட பள்ளிரோடு பகுதியில் Road Project திட்டத்தின்கீழ் சாலை விரிவாக்கம் செய்யும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது. மேற்படி சாலைப் பணிக்கு இடையூறாக இருந்த 19 மின்கம்பங்களை மாற்றியதற்கு ரூ.2,27,700/– ஏற்கெனவே தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு செலுத்தப்பட்டது. தற்போது பெரியப்பள்ளி பக்கம் மேலும் நான்கு மின்கம்பங்களை மாற்றியமைப்பதற்கான விண்ணப்ப பதிவுக் கட்டணம் ரூ.500/–ம், மதிப்பீட்டுக் கட்டணம் ரூ. 50,300/– ம் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு நகராட்சி பொது நிதியிலிருந்து செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு :** அவசர அவசியத்தின்பேரில் நகராட்சி மன்றத் தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று பதிவு கட்டணம் ரூ.500/–ம் மற்றும் ரூ.50,300/–தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு செலுத்தியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண். 231 அலுவலகக் குறிப்பினை ஏற்றுக்கொள்ள ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்: 11</u>**

குளச்சல் நகராட்சி எல்கைக்குட்பட்ட ஆசாரிமார் தெருவில் உள்ள ஆழ்துளை கிணற்றில் மினி பவர் பம்ப் மற்றும் சின்டெக்ஸ் தொட்டி அமைத்து அதில் நீரேற்றி உபயோகத்தில் இருந்து வருகிறது. இந்நிலையில் அதனை நகராட்சி மன்றத் தலைவர், ஆணையர், உதவி செயற் பொறியாளர் மற்றும் நகராட்சி பொறியாளரால் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு நகரில் குடிநீர் வினியோகம் மேம்படுத்துவதை கருத்தில் கொண்டு அந்த ஆழ்துளை கிணற்றில் உள்ள **1.50** H.P. நீர்மூழ்கி மோட்டாருக்கு பதில் நகராட்சி இருப்பில் உள்ள **10 H.P.** நீர்மூழ்கி மோட்டாரை பொருத்தி அதனை நகராட்சி அலுவலக வளாகத்தில் உள்ள மேல்நிலை நீர்தேக்க தொட்டி மற்றும் பேருந்து நிலைய வளாகத்திலுள்ள மேல்நிலை நீர்தேக்கத் தொட்டிக்கு நகர்மன்றத் தீர்மானம் எண்.118 நாள் 28.02.2007 –ல் ஒப்புதல் வழங்கிய 6" பம்பிங் மெயினில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2006–07–ல் அமைக்கப்பட்ட ஆழ்துளை கிணற்று குடிநீர் விநியோகத்துடன் பம்பிங் செய்யலாம் என்றும், அதற்கான மதிப்பீடு தயார் செய்யுமாறும் நகர்மன்றத் தலைவரால் அறிவுறுத்தப்பட்டதன் அடிப்படையில் மேற்கண்ட பணிகளை செய்வதற்கும் அதற்கு ஆகும் உத்தேச செலவுத் தொகை ரூ. 65,000/– க்கும், பணியினை நகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்திடவும் மன்ற ஒப்புதல் வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் ஒப்புதல் செய்யலாம்.

**தீர்மானம் எண். 232 அலுவலகக் குறிப்பினை ஏற்றுக்கொள்ள ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்: 12</u>**

குளச்சல் நகராட்சிக்கு சொந்தமான பெருந்தலைவர் காமராஜர் பேருந்து நிலைய வணிக வளாகத்தில் உபயோகமில்லாமல் இருந்த கழிப்பிடத்தை கடைகளாக மாற்றுவதற்கு ரூ.75,000/– மதிப்பீட்டிலான பணிக்கு நகர்மன்றத் தீர்மான எண். 184 நாள் 20.04.2007 மூலம் ஒப்புதல் பெறப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றது. தற்போது மேற்படி 5 கடைகளுக்கு மின்வசதி பணிகள் செய்வதற்கும், மழைநீர் செல்வதற்கு பி.வி.சி. குழாய் அமைப்பதற்கும் மேற்கூரையில் சிமென்ட் சிலாப் மற்றும் படிக்கட்டில் தடுப்பு சுவர் அமைப்பதற்கும் ரூ. 45,000/– மதிப்பீட்டிற்கும் இப்பணியினை பொது நிதியிலிருந்து செய்வதற்கும் மன்ற ஒப்புதல் கோரப்படுகிறது.

**அ.குறிப்பு :** மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**தீர்மானம் எண். 233 அலுவலகக் குறிப்பினை ஏற்றுக்கொள்ள ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்: 13</u>**

சுனாமி திட்டத்தின்கீழ் ரூ. 30.00 இலட்சம் மதிப்பீட்டில் மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி கட்டி மூன்று ஆழ்துளை குழாய் கிணறு அமைத்து பம்பிங் மெயின் அமைக்க அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன்பேரில் மூன்று ஆழ்துளை கிணறுகள் அமைக்க Geologist Report பெற ஆகும் செலவினம் (1000 x 3) = ரூ. 3000/- க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு :** அவசர அவசியத்தின்பேரில் நகராட்சி மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று Ananth Ground water Investigation Centre, Nagercoil அவர்களுக்கு பணி உத்தரவு வழங்கி பணி மேற்கொண்டதையும், அதற்கான செலவினம் ரூ.3,000/—ஐ சுனாமி நிதியில் வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண். 234 அலுவலகக் குறிப்பினை ஏற்றுக்கொள்ள ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 14</u>**

குளச்சல் நகராட்சியில் உள்ள திடக்கழிவுகளை அப்புறப்படுத்துவதற்கு மினிலாறி டாட்டா 407 ஒன்று இரண்டாவது மாநில நிதிக்குழு 2003—2004 பரிந்துரை திட்டத்தின்கீழ் வாங்கப்பட்டுள்ளது. அந்த வாகனத்தை வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தில் பதிவு செய்வதற்கு மோட்டார் வாகன ஆய்வாளர், மார்த்தாண்டம் அவர்களிடமிருந்து கீழ்கண்ட தொகையினை செலுத்தும்படி கடிதம் வரப்பெற்றுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| 1) மினி லாரி பதிவுக்கட்டண வரி 08.09.2006 முதல் 07.07.2007 முடிய 530 x 10 = | : | ரூ. | 5300/— |
| 2) டெம்போ பதிவுக் கட்டணம் 10 x 40 = | : | ரூ. | 400/— |
| 3) காம்பவுண்டிங் கட்டணம் | : | ரூ. | 100/- |
| 4) நிரந்தர பதிவுக் கட்டணம் | : | ரூ. | 300/— |
| 5) தகுதிச்சான்று கட்டணம் | : | ரூ. | 300/— |
| 6) G.C.P.A. கட்டணம் | : | ரூ. | 1350/— |
| 7) வரி | : | ரூ. | 950/— (ஒவ்வொரு காலாண்டுக்கும்) |
| **மொத்தம்** | : | **ரூ.** | **8700/—** |

ஆகவே மினி லாரியினை பதிவு செய்வதற்கு மேற்கண்ட தொகையினை செலுத்துவதற்கு மன்ற ஒப்புதல் வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**தீர்மானம் எண். 235 அலுவலகக் குறிப்பினை ஏற்றுக்கொள்ள ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

நகராட்சி மன்றத் தலைவர்
குளச்சல் நகராட்சி.

**குளச்சல் நகராட்சி**

குளச்சல் நகராட்சி மன்றத்தின் சாதாரணக்கூட்டம் ஜுன் திங்கள் 25–ம் நாள் திங்கள்கிழமை காலை 10.30 மணிக்கு நடைபெறும். தாங்கள் தவறாது கலந்து கொள்ளுமாய் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

தலைவர்
குளச்சல் நகராட்சி மன்றம்

<u>பொருள் எண்: 1</u>

இந்நகராட்சிக்கு திடக்கழிவு மேலாண்மைக்கு கலவை உரக்கிடங்கிற்கு தேவையான சர்வே எண்.188/19, 188/13, 188/12, 188/14, 188/7–ல் 1.96 ஏக்கர் நிலம் வாங்குவதற்கு மாசு கட்டுப்பாட்டு வாரியம், நாகர்கோவில்–க்கு தடையில்லா சான்று வழங்க கேட்டு கடிதம் அனுப்பப்பட்டது. ஆனால் மேற்படி அலுவலகத்திலிருந்து வரப்பெற்ற கடிதம் AEE/04/F/MSNSC/2005 நாள் 13.06.2007–ல் அவர்கள் இடம் சென்று பார்வையிட்டதன் பேரில் பக்கத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களின் குடியிருப்புகளும் மேலும் புதியதாக கட்டப்பட்டு வருகின்ற சுனாமி குடியிருப்புகளும் உள்ளதால் உரக்கிடங்கு நிலம் வாங்க வேறு இடம் தேர்வு செய்யுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது என்பதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.

**அ.குறிப்பு** : மன்றம் முடிவு செய்யலாம்.

**தீர்மானம் எண். 236 வேறு இடம் வாங்குவதற்கு முடிவு செய்யப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

<u>பொருள் எண்: 2</u>

இந்நகராட்சி கணனிப் பிரிவிற்கு நகல் எடுப்பதற்கு தேவையான Tonar அவசரமாக தேவைப்படுகிறது. அதனை வாங்குவதற்கான, உத்தேச செலவு ரூ. 6,000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண். 237 அலுவலகக் குறிப்பினை ஏற்றுக்கொள்ள ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

<u>பொருள் எண்: 3</u>

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.19–ல் கதவு எண். 22/58A லுள்ள குடிநீர் இணைப்பு எண். 2171–ஐ 29.12.2006–ல் துண்டிப்பு செய்யப்பட்டுள்ளதால் மேற்படி குடிநீர் இணைப்பை 29.12.2006 முதல் கேட்பினை நிறுத்தி வைக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண். 238 அலுவலகக் குறிப்பினை ஏற்றுக்கொள்ள ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்: 4</u>**

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.14–ல் கதவு எண். 15/59 லுள்ள குடிநீர் இணைப்பு எண். 1767–ஐ 07.06.2007–ல் துண்டிப்பு செய்யப்பட்டுள்ளதால் மேற்படி குடிநீர் இணைப்பை 07.06.2007 முதல் கேட்பினை நிறுத்தி வைக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண். 239 அலுவலகக் குறிப்பினை ஏற்றுக்கொள்ள ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்: 5</u>**

இந்நகராட்சி மினி லாறி T.N.74-Z-5507 –க்கு புதிய மின்கலம் மாற்றிய வகையில் ரூ.2800/– ஐ ஆன்றனி பேட்டரி ஒர்க்ஸ், குளச்சல் என்பவருக்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** இந்நகராட்சி மினிலாறி T.N.74-Z-5507 –க்கு அவசர அவசியம் கருதி புதிய மின்கலம் மாற்றுவதற்கு நகர்மன்றத் தலைவரின் முன்அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரியதையும், அதன்பேரில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள ஆன்றனி பேட்டரி ஒர்க்ஸ், குளச்சல் என்பவருக்கு பணி உத்தரவு வழங்கியதையும், அதற்கான பட்டியல் தொகை ரூ. 2800/– வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண். 240 அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்: 6</u>**

குளச்சல் நகராட்சி குடிநீர் பிரிவில் இந்நகராட்சிக்குட்பட்ட பாலத்தன்கரை பகுதியிலிருந்து நகராட்சி அலுவலக வளாகத்தில் உள்ள மேல்நிலை நீர்தேக்க தொட்டி வரை 6” பி.வி.சி. குடிநீர் நீரேற்றும் குழாய் அமைக்கும் பணி நகர்மன்றத் தீர்மானம் எண். 157 நாள் 31.03.2007 –ல் ஒப்புதலளிக்கப்பட்டதின் பேரில் பணி உத்தரவு வழங்கப்பட்டு தொடர்ந்து பணி நடைபெற்று வருகிறது. மேற்படி பணியில் குளச்சல் மெயின் ரோட்டில் பொதுப்பணித் துறை விருந்தினர் மாளிகை அருகே தமிழ்நாடு அரசு நெடுஞ்சாலைத் துறைக்கு சொந்தமான சாலையினை குறுக்காக உடைத்தும், சாலையோரமாக 250 மீட்டர் நீளத்தில் நிலத்தினை தோண்டி குழாய் அமைக்க வேண்டியுள்ளது. எனவே இது தொடர்பான கட்டணம் ரூ. 16700/– உதவி கோட்டப் பொறியாளர், நெடுஞ்சாலைத் துறை, தக்கலை அவர்களுக்கு செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு :** அவசர அவசியத்தின் பேரில் நகராட்சி மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று ரூ. 16700/– உதவி கோட்டப் பொறியாளர், நெடுஞ்சாலைத் துறை, தக்கலை அவர்களுக்கு செலுத்தியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண். 241 அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

<u>பொருள் எண்: 7</u>

குளச்சல் நகராட்சியின் அனைத்து பகுதிகளுக்கும் தினமும் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருவதால் குடிநீர் நீரேற்றும் பிரதான குழாய்கள், குடிநீர் விநியோகம் செய்யும் குழாய்கள், வால்வுகள் ஆகியவைகளில் அடிக்கடி பழுதுகள் ஏற்படுகின்றன. இதனால் குடிநீர் விநியோகம் தடைபடாமல் இருக்க போர்க்கால அடிப்படையில் பணிகளை உடனுக்குடன் நிறைவேற்ற வேண்டியுள்ளது. இதனடிப்படையில் கீழ்க்குறிப்பிட்டுள்ள பணிகளை உடனே மேற்கொள்ளவும், இதற்கான மதிப்பீட்டு தொகை ரூ. 61,000/– க்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| 1 | களிமார் பகுதியில் பொதுக் குழாயில் ஏற்பட்டுள்ள உடைப்பினை சரி செய்தல். |
| 2 | மரமடி கழிப்பறையில் நல்லி மாற்றுதல். |
| 3 | இலப்பவிளை பகுதியில் பொதுக் குழாயில் ஏற்பட்டுள்ள உடைப்பினை சரி செய்தல். |
| 4 | மரமடியில் 2” PVC விநியோக குழாய் சரி செய்தல் மற்றும் 4” குடிநீர் நீரேற்றும் குழாய் சரி செய்தல். |
| 5 | சீம்பிளிவிளை சுனாமி Shed No. II Bore well பக்கம் 2 1/2" விநியோக குழாய் சரி செய்தல். |
| 6 | பர்னட்டிவிளை, தும்பக்காடு ஆகிய பகுதிகளில் வால்வுகள் சரி செய்தல். |
| 7 | கிரீன் தெருவில் 2” Nipple சரி செய்தல். |
| 8 | மலிக்காகிணறு பக்கம் 3” பி.வி.சி.விநியோக குழாய் சரி செய்தல். |
| 9 | C.M.C.காலனி பக்கம் 5” PVC line சரி செய்தல். |
| 10 | சாஸ்தான்கரையில் ¾” பொதுக்குழாய் உடைப்பு ஏற்பட்டதினை சரி செய்தல் மற்றும் 3” PVC பைப் லைன் உடைந்ததை சரி செய்தல். |
| 11 | பள்ளி ரோடு ராபின் ஆஸ்பத்திரி பக்கம் ¾” Gate valve சரி செய்தல். |
| 12 | கொட்டில்பாட்டில் 2 பொதுக்குழாய்கள் சரி செய்தல் |
| 13 | ஆசாத் நகரில் 3” பிவிசி supply line சரி செய்தல். |
| 14 | பஸ் நிலையம் சமீபம் 6” A.C. Pump line சரி செய்தல். |
| 15 | கால்நடை மருத்துவமனை பக்கம் பொதுக்குழாய் சரி செய்தல். |
| 16 | பள்ளி ஜங்சனில் 3” pvc விநியோக குழாய் சரி செய்தல் |
| 17 | சொட்டில்பாடு மெயின்ரோட்டில் 4” Sluice valve சரி செய்தல் |
| 18 | மார்க்கெட் ரோட்டில் 4” pvc line சரி செய்தல். |
| 19 | காசீம் திருமண மண்டபம் பக்கம் 3” pvc supply line சரி செய்தல் |
| 20 | மரமடி ஜங்சனில் 4’’ G.I. Pump line சரி செய்தல் |
| 21 | பாலத்தன் கரையில் 4’’ G.I. Pump line சரி செய்தல் |
| 22 | ஆசாத் நகரில் 3” pvc supply line சரி செய்தல் |
| 23 | ஆசாத் நகரில் 2 1/2” Pumping line சரி செய்தல் |
| 24 | துறைமுகத்தெரு எண். 1ல் 3” pvc supply line சரி செய்தல் |

அ.குறிப்பு : அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண். 242 அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்: 8</u>**

இந்நகராட்சி கணனிப் பிரிவில் இயங்கி கொண்டிருக்கின்ற A.C (குளிரூட்டியும்) அதனுடன் இணைக்கப்பட்டுள்ள Stabilizer–ம் பழுதடைந்து விட்டதால் உடனடியாக சரி செய்யவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ. 2000/–க்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண். 243 அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்: 9</u>**

இந்நகராட்சி கணனிப் பிரிவில் கடந்த ஏப்ரல் மாதம் 10–ம் தேதி பெய்த கோடை மழையின் போது ஏற்பட்ட இடி மின்னல் தாக்குதல் காரணமாக E.Mail System பழுதடைந்து அதனை சரி செய்ய உத்தேச செலவு ரூ. 1800/–க்கு (நகர்மன்ற தீர்மானம் எண்.200 நாள் 29.05.2007) அனுமதி வழங்கியதின் பேரில் இரண்டு விலைப்புள்ளிகள் பெறப்பட்டன. அவை

1) Emyes Infonet & Multimedia, Nagercoil : ரூ. 1800/–
2) Meera Agencies, Nagercoil : ரூ. 2105/–

இதில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள M/s. Emyes Infonet & Multimedia, Nagercoil அவர்களின் விலைப்புள்ளி மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அ.குறிப்பு :** குறைந்த விலைப்புள்ளியை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண். 244 அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்: 10</u>**

குளச்சல் நகராட்சிக்கு 2006–2007–ம் ஆண்டிற்கு 12–வது நிதிக்குழு பரிந்துரையின் பேரில் ரூ. 25,26,884/– ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்திற்கு 50% (12,63,442/–) ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதனடிப்படையில் நகர்மன்ற தீர்மானம் எண். 186 நாள் 20.04.2007–ன்படி ஒப்பந்தப்புள்ளிகள் கோருவது தொடர்பாக 08.06.2007–ம் நாளைய தினத்தந்தி பத்திரிகையில் விளம்பரம் செய்த வகையில் சம்மந்தப்பட்டவருக்கு ரூ. 1368/– வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு :** அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண். 245 அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்: 11</u>**

இந்நகராட்சி சுனாமி நிவாரணப்பணிகள் (ETRP) திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்படவிருக்கும் ஆசாத்நகர், மலிக்காகிணறு ஆகிய பகுதிகளின் பணிகள் தொடர்பாக மண் ஆய்வு செய்வதற்கு (அரசு பொறியியல் கல்லூரி, திருநெல்வேலி மூலம்) செலவுத் தொகை ரூ. 5000/– வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு :** அவசர அவசியத்தின் பேரில் நகராட்சி மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று, முதல்வர், அரசு பொறியியல் கல்லூரி, திருநெல்வேலி அவர்களுக்கு ரூ. 5000/– க்கு வரைவோலை வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண். 246 அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்: 12</u>**

**<u>குளச்சல் நகராட்சி 1–வது வார்டு உறுப்பினர் திருமதி. எம்.மேரி அல்போன்சாள் கொண்டு வரும் தீர்மானம்</u>** :

(1) குளச்சல் நகராட்சிக்குட்பட்ட வெள்ளியாகுளம் பகுதியில் கதவு எண்.1–10A (உரக்கடை) அருகில் ஒரு பொது குடிநீர் குழாய் அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

(2) குளச்சல் நகராட்சிக்குட்பட்ட சாஸ்தான்கரை, செந்தறைவிளை பகுதியில் அமைந்துள்ள FI-26 எண்ணுடைய மின்கம்பத்தில் ஒரு தெருவிளக்கு அமைத்து தர மன்றம் தீர்மானிக்கலாம்.

**தீர்மானம் எண். 247 ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்: 13</u>**

**<u>குளச்சல் நகராட்சி 6–வது வார்டு உறுப்பினர் திருமதி. செலஸ்டீனம்மாள் கொண்டு வரும் தீர்மானம் :</u>** குளச்சல் நகராட்சியின் எல்கைகளான வெள்ளியாகுளத்தன்கரை, வி.கே.பி.பள்ளி, கொட்டில்பாடு, களிமார் பாலம், சைமன்காலனி பாலம் ஆகிய பகுதிகளின் முகப்பு பகுதியில் “**குளச்சல் நகராட்சி வரவேற்கிறது**” என்ற பெயர் பலகை அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

**தீர்மானம் எண். 248 ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

நகராட்சி மன்றத் தலைவர்
குளச்சல் நகராட்சி

<u>குளச்சல் நகராட்சி</u>

குளச்சல் நகராட்சி மன்றத்தின் அவசரக்கூட்டம் ஜுன் திங்கள் 25–ம் நாள் திங்கள்கிழமை காலை 11.00 மணிக்கு நடைபெறும். தாங்கள் தவறாது கலந்து கொள்ளுமாய் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

தலைவர்
குளச்சல் நகராட்சி மன்றம்

**<u>பொருள் எண் : 1</u>**

குளச்சல் நகராட்சிக்கு 2006–2007–ம் ஆண்டிற்கு 12–வது நிதிக்குழு பரிந்துரையின் பேரில் ரூ. 25,26,884/– ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்திற்கு 50% (12,63,442/–) ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதனடிப்படையில் நகர்மன்றத் தீர்மானம் எண். 186 நாள் 20.04.2007–ல் இந்திராகாலனி பகுதியில் குப்பைகள் கொட்டப்படும் இடத்தில் சிமெண்ட் தளம் அமைத்து குப்பைகளை பிரித்து மண்புழு உரம் தயாரிக்கும் ஷெட் அமைப்பதற்கு ரூ. 6.65 இலட்சத்திற்கு அனுமதியளிக்கப்பட்டதின் பேரில் 19.06.2007 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டன. அதன்பேரில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன. அவை

1. திரு. எஸ். அம்புறோஸ் 0.001 % மதிப்பீட்டைவிட குறைவு
2. திரு. டேவிட் ராஜன் 3.38 % மதிப்பீட்டைவிட அதிகம்

இதில் திரு. எஸ். அம்புறோஸ் என்பவர் 0.001 % மதிப்பீட்டைவிட குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளார். இது மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அ.குறிப்பு** : குறைந்த ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண். 249 அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண் : 2</u>**

குளச்சல் நகராட்சிக்கு 2006–2007–ம் ஆண்டிற்கு 12–வது நிதிக்குழு பரிந்துரையின் பேரில் ரூ.25,26,884 /– ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்திற்கு 50% (12,63,442/–) ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதனடிப்படையில் நகர்மன்றத் தீர்மானம் எண். 186 நாள் 20.04.2007–ல் இந்திராகாலனி பகுதியில் குப்பைகள் கொட்டப்படும் இடத்தை சுற்றி சுற்று சுவர் கட்டுவதற்கு ரூ. 6.10 இலட்சத்திற்கு அனுமதியளிக்கப்பட்டதின் பேரில் 19.06.2007 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டன. அதன்பேரில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன. அவை

1. திரு. டேவிட் ராஜன் 0.001 % மதிப்பீட்டைவிட குறைவு
2. திரு. எஸ். அம்புறோஸ் 5.57 % மதிப்பீட்டைவிட அதிகம்

இதில் திரு. டேவிட் ராஜன் என்பவர் 0.001 % மதிப்பீட்டைவிட குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளார்.

இது மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அ.குறிப்பு** : குறைந்த ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண். 250 அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்: 3</u>**

குளச்சல் நகராட்சிக்கு 2006–2007–ம் ஆண்டிற்கு 12–வது நிதிக்குழு பரிந்துரையின் பேரில் ரூ.25,26,884/– ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்திற்கு 50% (12,63,442/–) ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதனடிப்படையில் நகர்மன்றத் தீர்மானம் எண். 186 நாள் 20.04.2007–ன் படி ஒப்பந்தப்புள்ளிகள் கோருவது தொடர்பாக 08.06.2007–ம் நாளைய தினத்தந்தி பத்திரிகையில் விளம்பரம் செய்த வகையில் சம்மந்தப்பட்டவருக்கு ரூ. 1368/– வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு :** அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண். 251 –ற்கான பொருள் ஏற்கனவே ஜுன் 25–ம் தேதி நடைபெற்ற சாதாரண கூட்டத்தில் பொருள் எண் 10–ல் இடம் பெற்றுள்ளது.**

**<u>பொருள் எண்: 4</u>**

குளச்சல் நகராட்சிக்கு சொந்தமான டாக்டர் அம்பேத்கார் தினசரி சந்தையில் IDSMT திட்டத்தின் கீழ் கட்டப்பட்டு வரும் வணிக வளாகத்தில் பணிகள் நிறைவடையும் நிலையில் உள்ளது. மேற்படி வணிக வளாகத்தில் தமிழ்நாடு மின்சார வாரிய அலுவலகத்திற்கெனவும், மணவாளகுறிச்சி கூட்டுறவு பண்டக சாலை மூலம் ரேஷன் கடைக்கும், குளச்சல் கிளை நூலகத்திற்கும் ஒதுக்கீடு செய்து உரிய மாற்றங்கள் மேற்கொள்வதற்கு நகர்மன்றத் தீர்மானம் எண். 198 நாள் : 29.05.2007 –ல் ரூ. 1,85,000/– ம் மதிப்பீட்டினை (பொது நிதியில்) மேற்கொள்வதற்கு அனுமதி அளித்துள்ளது. எனவே இது தொடர்பாக ஒப்பந்தப்புள்ளிகள் 19.06.2007 அன்று கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன. அவை

1. திரு. பி. தங்கமணி 2.16 % மதிப்பீட்டைவிட அதிகம்
2. திரு. எம்.எம். கிளீட்டஸ் 0.16 % மதிப்பீட்டைவிட குறைவு

இதில் திரு. எம்.எம். கிளீட்டஸ் என்பவர் 0.16 % மதிப்பீட்டைவிட குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளார்.

இது மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அ.குறிப்பு :** குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு. எம்.எம். கிளீட்டஸ் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண். 252 அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்: 5</u>**

குளச்சல் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2007–2008–ன் கீழ் குளச்சல் நகராட்சிக்குட்பட்ட முஸ்லீம் ஜும்மா பள்ளி வாசல் கல்லறை தோட்டத்திற்கு சுற்று சுவர் அமைக்க ரூ. 3.00 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதன்படி ( நகர்மன்றத் தீர்மானம் எண். 221 நாள் : 29.05.2007–ல்) பதிவு செய்யப்பட்டுள்ளது. அதனடிப்படையில் 21.06.2007 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டன. அதன் விபரம் பின்வருமாறு.

1. திரு. ற்றி. ராதா கிருஷ்ணன் 11.73 % மதிப்பீட்டைவிட அதிகம்
2. திரு. பி. ஆரோக்கியதாஸ் 0.43 % மதிப்பீட்டைவிட குறைவு

இதில் திரு. பி. ஆரோக்கியதாஸ் என்பவர் 0.43 % மதிப்பீட்டைவிட குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளார். இது மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அ.குறிப்பு :** குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு. பி. ஆரோக்கியதாஸ் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண். 253 அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்: 6</u>**

இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் சாக்கடையில் கொசுக்களை அழிக்கும் பித்தளை கை தெளிப்பான் கேன் (9– லிட்டர்) 3– எண்ணம் தேவைப்படுவதால் அதனை அவசரமாக வாங்கிய வகையில் ரூ. 11400/–யை திரு. ராஜ் அக்ரோ சர்வீஸ், நாகர்கோயில் அவர்களுக்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு :** அவசர அவசியத்தின் பேரில் நகராட்சி மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று, விலைப்புள்ளி கோரியதையும், குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள M.S. ராஜ் அக்ரோ சர்வீஸ், நாகர்கோயில் அவர்களுக்கு பணி உத்தரவு வழங்கியதையும், அதன் பேரில் கேன் வாங்கியதற்கான தொகை ரூ. 11400/– வழங்கவும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண். 254 அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்: 7</u>**

இந்நகராட்சி ஆணையாளர் மற்றம் நகராட்சி பொறியாளர் ஆகியோர்களது இருக்கைகளுக்கு கணணி அமைக்க, ஆணைாளர் அறைக்கு வயரிங் வசதி செய்ய வேண்டியுள்ளது அதற்கும், மற்றும் பொறியாளர் அறையில் கணணி அமைக்க யு.பி.எஸ். தேவைப்படுவதால், ஏற்கனவே கணணி பிரிவில் உள்ள 0.6 KV. யு.பி.எஸ். பேட்டரி பழுதடைந்துள்ளது. அதனை மாற்றி புதிய பேட்டரி அமைக்கவும், உத்தேச செலவுத் தொகையாக ரூ. 6,500/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண். 255 அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண் : 8</u>**

குளச்சல் நகராட்சி சுனாமி நிவாரணப் பணிகள் தொடர்பாக திட்ட இயக்குநர், சுனாமி நிவாரணப்பணிகள், சென்னை அவர்களின் கடிதம் எண். TRR-EAP -2 /076/2006 நாள் 20.06.2007– ன் படி கீழ்கண்ட பணிக்கான டெண்டர் ஒப்புதலளிக்கப்பட்டுள்ளது. விபரம் மன்றத்தின் பார்வைக்கு.

| வ.எண். | பணியின் விபரம் | ஒப்பந்தக்காரர் பெயர் | மதிப்பீட்டுத் தொகை லட்சத்தில் | ஒப்பந்த விபரம் |
|---|---|---|---|---|
| 1 | துறைமுகத்தெரு I, II & III, ஈழக்காணிவிளை, மாதாகாலனி, சாம்பசிவபுரம் மற்றும் மரமடி தெருக்களில் சிமெண்ட் தளம் மற்றும் மழைநீர் வடிகால் அமைத்தல், காந்தி சந்திப்பு முதல் மரமடி சந்திப்பு வரை மழைநீர் வடிகால் அமைத்தல். | திரு.M. வர்க்கீஸ் | 78.50 | ரூ.89,90,927/– (மதிப்பீட்டைவிட 19.55% அதிகமாகவும், மற்றும் தற்போதைய விலை விகிதத்தை விட (பொதுப்பணித் துறை) 12.07% அதிகமாகவும்.) |

**<u>அ.குறிப்பு :</u>** பதிவு செய்யலாம்.

**தீர்மானம் எண். 256 பதிவு செய்யப்பட்டது.**

நகராட்சி மன்றத் தலைவர்
குளச்சல் நகராட்சி